## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.166/2024.

Prosecution witness for P.W.14.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ஆறுமுகசாமி.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2025.

Accused are present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து கோவில்பட்டி – எட்டையபுரம் சாலையில் பெட்ரோல் நிலையம் நடத்தி வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு எட்டையபுரம் போலீசார் என் பெட்ரோல் நிலையத்திற்கு வந்து எட்டையபுரம் கோவில்பட்டி சாலையில் ஒரு டிப்பர் லாரி ஒரு ஆளை அடித்துவிட்டதாகச் சொல்லி அதற்கான பதிவுகள் கண்காணிப்பு கேமராவில் பதிவாகியிருக்கும் என்று கண்காணிப்பு கேமரா பதிவுகளை போலீசார் கேட்டார்கள். நான் கண்காணிப்பு கேமரா பதிவுகளை எடுத்துக் கொடுத்தேன். மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளை Pendrive வில் பதிவு செய்து கொண்டு போனார்கள். மேற்படி சம்பவம் விபத்து அல்ல என்றும், கொலை என்றும் போலீசார் விசாரணை செய்தார்கள். அந்த வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்கு தெரியாது. மேற்படி கண்காணிப்பு கேமரா பதிவுகளை பதிவு செய்வதற்காக நான் அளித்த சான்று **அ.சா.ஆ 10**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 10 ஆவணம் 27.06.2024–ல் தேதியில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக முத்திரையிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என் கையொப்பத்திற்கு நான் தேதியிடவில்லை. நான் சென்ட்ரல் வங்கியிலிருந்து ஓய்வு பெற்ற ஊழியர். எனக்கு தட்டச்சு செய்ய தெரியாது. அ.சா.ஆ 10 ஆவணம் எங்கு, யாரால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. அ.சா.ஆ 10–ல் உள்ள விபரங்களை நான் தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்பட்டு படித்து பார்த்தேன். அந்த விபரங்கள் நான் தற்போது படித்து பார்த்த பிறகுதான் எனக்கு தெரியுமா என்றால் அது எழுதப்பட்டபோதே எனக்கு படித்து காட்டினார்கள் அப்போதே எனக்கு தெரியும். அ.சா.ஆ 10–ல் உள்ள விபரங்களை போலீசார் படித்து காட்டியபிறகுதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.ஆ 10–ல் நான் படித்து பார்த்து கையொப்பமிட்டதாக குறிப்பு இல்லை. நான் பெட்ரோல் நிலையம் நடத்துவதால் போலீசாரின் அனுசரணை எனக்கு எப்போதும் தேவை என்றால் எல்லோருக்கும் தேவை. எங்கள் பெட்ரோல் நிலையத்தில் ஆறு கண்காணிப்பு கேமராக்கள் உள்ளன. சாலையை நோக்கி ஒரு கேமரா உள்ளது. மேற்படி சாலையில் பல வாகனங்கள் போகும், வரும் என்றால் சரிதான். மேற்படி கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி சுமார் ஐந்து ஆண்டுகள் இருக்கும். கேமராக்களை பொருத்துவதற்கு கேமரா கம்பெனிக்காரர்கள் வரவில்லை என்பதால் உள்ளூரில் உள்ள வேறு நபர்களை வைத்து பொருத்தினேன். அந்த கேமராவில் settings–ஐ மாற்ற முடியுமா என்றால் எனக்கு தெரியாது. அதில் உள்ள தேதியை மாற்ற முடியுமா என்றால் எனக்கு தெரியாது. தேதியை மாற்றினால் அதில் உள்ள வெவ்வேறு பதிவுகள் அனைத்தும் வெவ்வேறு நேரத்தை காட்டும் என்றால் எனக்கு தெரியாது. கண்காணிப்பு கேமரா, அதில் உள்ள பதிவுகள், பிரதி

எடுத்தல் ஆகியவற்றில் எனக்கு நிபுணத்துவம் இல்லை. போலீசார் என்னை கண்காணிப்பு கேமரா பதிவுகளை எடுக்கத்தான் வந்தார்கள். மேற்படி சாலையில் பள்ளிகள் மற்றும் இதர அலுவலகங்கள் இருக்கும்போது என்னை மட்டும் விசாரிக்க தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. அ.சா.ஆ 10–ல் கையொப்பமிட நான் தகுதியான நபர் இல்லை என்றும், அந்த கணினியை பராமரிக்கும் நபர்தான் தகுதியான நபர் என்றும் சொன்னால் சரிதான். கேமரா பதிவுகள் 15 நாட்கள் முடிந்த பிறகு தானாக அழிந்துவிடும். எந்த நிலையில் இருந்த போலீசார் என்னை வந்து பார்த்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சாலை வாகன விபத்து அதிகமாக நடக்கும் சாலை என்றால் சரிதான். வாகன விபத்து நடந்ததாக சொல்லும் தேதியிலிருந்து எத்தனை நாட்களுக்கு பிறகு போலீசார் என்னை வந்து கேட்டார்கள் என்றால் ஞாபகமில்லை. முதல் விசாரணை சங்கதிகள் மற்றும் அ.சா.ஆ 10 ஆகியவை உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. வழக்கின் சூழ்நிலைகளை அனுசரித்து பின்யோசனையின்பேரில் போலீசார் சொல்லிக் கொடுத்தப்படி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.06.13 16:36:20 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.